# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164 /2021

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : Periyandavar | Father/Husband Name | : Kasi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 07.04.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் உசிலம்பட்டி அருகி மாதரை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மெக்கானிக் மற்றும் ஆக்டிங் டிரைவராக வேலை செய்கிறேன். கடந்த ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. அ.சா.1ஐ தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள் திருமால்நகரிலுள்ள நான் வேலை செய்துவந்த பி.ஆர்.பி. நிறுவனர் மேலாளரின் வீட்டிலிருந்த கிளிகளுக்கு உணவு கொடுப்பதற்காக நான் சென்றுவந்திருந்தபோது போலீசார் என்னை விசாரித்தனர்.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 24.07.20ம் தேதி மாலை 6 மணிக்கு நான் எங்கள் கம்பெணி மேனேஜா் வீட்டிற்கு சென்றிருந்தபோது மேனேஜா் வீட்டில் இல்லாததால் பக்கத்து வீட்டில் கேட்கலாம் என்று மேனேஜா் வீட்டிற்கு தெற்குப்ககம் உள்ள வீட்டிற்கு சென்று பார்த்தேன், வீட்டில் யாரும் இல்லை, ஆனால் வீட்டு முகப்பு கதவு உடைக்கப்பட்டு திறந்திருந்தது. அக்கம்பக்கம் விசாரித்தபோது அந்த வீடு வக்கில் லோகநாதன் என்பவரின் வீடு என்றும், அவா் ஒருமாதமாக வீட்டை பூட்டி போட்டுவிட்டு சொந்த உா் சென்றிருப்பதாகவும், வீட்டில் திருடுபோயிருக்கலாம் என்றும், எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அருகில் குடியிருக்கும் வக்கீல் காசிநாததுரை என்பவரின் மனைவி சங்கீதா என்பவரிடம் தகவல் சொன்னேன். மேற்படி சங்கீதா வக்கீல் லோகநாதன் என்வருக்கு தகவல் சொல்லி 25.07.20ம் தேதி வக்கீல்

லோகநாதன் வீட்டிற்கு வந்து பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு திருடு நடந்திருப்“பதாகவும், நகைகள், பணம், கேமரா போன்ற பொருட்கள் காணவில்லை என்று புகார் கொடுத்திருப்பதாக கேள்விப்பட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.